SUPPLEMENT TO THE BRAHMAVDIYA

ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

அநுபந்தம்

புத் ௰௧] சிதம்பரம் ஏவிளம்பி௵ பங்குனி௴ ௭உக்கு 1898௵ மார்சு௴ 19உ [இல ௨௰.

வைதிகசந்திரமௌலி

மகாபாசுபதாஸ்திரபராவர்த்தனப்பிரயோகம்.

முன்தொடர்ச்சி.

இவர் வைதிகர் போகும்வழியை இகழ்ந்து புதுவழி புகுந்து புராணகதேசம் கவர்ந்து அவ்வழி நேர்ந்தவாறெல்லாம் சித்தாந்தங்கட்டி [மகம்மதீயர் கடவுள் சிருஷ்டிகள் பல செய்தழித்து ஒருமழி தேர்ந்த நேர்மைபோல] விரோதம் வந்துழி விட்டுப் புதியதுபுகுந்து நிலையற்றுத் திரிபவராதலால் அடியில் எங்கோ காளிகாண்டவசனம் இப்படி, கூர்மபுராணம் அப்படி, ஆகவே ஸ்ரீமாதவாசாரியசுவாமிகள் கூறியது புராணவிருத்தமென்றார். மீண்டும் முடியுமிடம்வந்து சர்வபுராணங்களிலும் அனேக வுபநிடதங்களிலும் சங்கிதாபாகங்களிலும் மற்றுமுள்ள சித்தாந்தநூல்களிலும் சிவரகசியாதி அனேக மகேதிகாசங்களிலும் வெள்ளிடைமலைபோல் விரிந்துகிடக்கும் திருஷ்டாந்தத்தையும் சொல்லையும் பிரமாணமாகக்கொண்டதும் வழங்கியதும் பெருங்குற்றமாயிற்று. நிற்க; இவரும் இவரினத்தாரும் கண்ட நவீனகுலாலசித்தாந்தத்திற்கென குலாலம், கூர்மம், செம்புக்களிம்பு, கண்ணொளி, கதிரவனொளி, சார்ந்த தன் வண்ணத்துக்கு ஸ்படிகலோகித முதலிய திருஷ்டாந்தங்களும், ஹௌத்ரீ, கிரியாவதி தீக்ஷை, சாதகன், அத்வா, மலம், பதி, ஆரியன் குலாலனுவானென்ற குயவன் இவைகளெல்லாம் எந்தமூல மந்திரங்களுள் எந்த வுபநிடதத்திற்கண்டார்? மேலும் ஆத்மா சதசத்தென்று ஜைனமதம் தழுவு மிவர்மதம் எப்புராணப் பகுதியிற் கூறப்பட்டது? மேற்கண்ட திருட்டாந்தங்களும் சொற்களும் எங்கும் வேதங்களில் மற்றப் புராணங்கள் முதலிய பதினான்கு வித்தியா ஸ்தானங்களிலும் இல்லாதிருக்க, அவைகளையெல்லாம் சுமந்து சுமந்துசித்தாந்த சாஸ்திரங்களான ஸ்ரீமத் வேதாந்தங்களுக்குப் பொருளுரைக்க எத்தனஞ்செய்த வஞ்சகமும் சூதும் பிறரறிந்து தம்மைப் பல்வாறு ஒடுக்குவாரென்றதை மட்டில் ஏன் அறிந்தாரில்லை? மேலும் இவ்வையர் காட்டியபடி ரஜ்ஜு ஸர்ப்பம் முதலிய திருட்டாந்தங்களும் கானற்ஜலமாதிகளும் கூடஸ்தனாதி சொற்களும் வேதோக்தங்களே என்று தாமே எடுத்து ஒத்துக்கொண்டு வேறு உபநிடதங்களிலுள்ளவைகளை வேறு உபநிடதங்களிற் சேர்த்துப் பொருள் செய்தமைக்குக் காரணம் தெரிவிக்கவேண்டிய தலைச்சுமை. சங்கராசாரியர் அவதாரமகிமை நூலெழுதியவருக்கே என்றார். அது அவர் தலைப்பாரம் மாத்திரமல்ல. மற்ற உலகத்துக்குள்ள எல்லா வேதாந்திகளுக்கும் தலைப்பாரமே. ஆனாலும் வேதாந்திகள் சுமக்கவேண்டிய மேற்கண்ட பாரத்தைவே தங்களும் வேதோபபிருங்கணங்களுமே சுமந்து வெளிவந்தனவென்றும், அவ்வாசிரியர் சிகாமணி எழுதியதெல்லாம் அம்மம்ம! புராணாதி புண்யசாஸ்திர சம்பந்தமின்றி வேறு யாதுமில்லையென்றும் யாமே நிரூபித்து ஆரியனார் அத்துவிதியார் முதலியவருக் கிவ்விஷயத்தில் பாகம் கொடுக்காது சித்தாந்தம் முடித்து எதிரி கைகளை முறித்திட்டோம். மேற்கண்டபடி எந்த வித்தியாஸ்தானங்களிலும் இல்லாதஇவர் திருட்டாந்தப் போலிகளையும் இவரினத்தார் வழங்கும்சொற்களையும் இவர் சுத்த வைதிகராய் அன்றுமுதல் இன்றுவரை பூர்ணநியமங்களுடன் அத்தியயனவழி மாறாது ஓதுவதும் பொருள் விசாரிப்பதும் குலவிரதமாய்க்கொண்டு பயிலும் உபநிஷத்துக்களை நியாயம் சிறிதுமின்றி அவைதிகருக்குப் பாகப்படுத்திக்கொடுக்க இவர் அந்நியமாய் வெளியேறி விபரீதமாய் அவ்வுபநிடத வசனங்களுக்குப் பொருளுரைத்து அவற்றிலுள்ள பூதி, சிரோவிரதம் அத்தியாச்சிரமாதிச் சொற்களுக்கு சுத்த அவைதிக காமிகாதி தந்திரப்பிரதிபாத்திய ஹௌத்ரீவிஷயமாகப்பொருள்படுத்தியநேர்மை, தாயையடக்கிமகள் அவிசாரிபோன கதையேயன்றோ? மேலும் இவர் அப்பையதீக்ஷிதராம் மகாபெரியோரென்று பலவிடம் பேசுகிறார். அப்பெரியோர் சித்தாந்தலேசசங்கிரகத்தில் ஸ்ரீலோக குருக்களைப் புகழ்ந்திட்ட சீடரை இவர் அறிந்திலரென்பது திண்ணம். அறிந்திருப்பரேல் இவ்விதம் அவர்களைத் தூற்றி யாதனைக் காளாகார். இவர் அந்தப்பெரியோர் தமது சித்தாந்தநூல்களைக் கண்டித்து அவைதிகங்களாமெனச் சிவதத்துவ விவேகத்தில் காட்டியதையும் ‘ஐநஙஂயஸவ ாஹ:’ என்ற சுலோகத்தால் சிவப்பிராபவம் சொல்லுமிடத்திலேயே அவைதிகாகமோக்த சித்தாந்தத்தைப்பழித்துக் குறித்து வேதாந்தத்தைச் சீர்தூக்கிப்புகழ்ந்ததும் எல்லாப்பண்டிதரும் அறிந்திருக்க, அவர் தமக்குச் சாதகரென்று அவரைத் தழுவிப் புகழ்வதுதான் இவர் சுத்த வீர்யத்துக்குசிதமோ? என்செய்வார்? ஆரியத்திற்பிறந்து ஆரியத்திலே வளர்ந்து ஆரியர் சித்தாந்தமெல்லாங்கற்று அங்கே பெரியவாசாலராய் உலகத்தைக் கலந்து உண்மை

மறைத்து மறைப்பொருள் மாற்றி மாதேவன் வழிபாட்டையழித்து புதிய சித்தாந்தம் செய்த விஷ்ணு வைஷ்ணவாம்சங்களான புத்த ராமானுஜர்களை ஸ்ரீ லோககுருநாதனும் ஸ்ரீமதப்பைய தீக்ஷிதமூர்த்திகளுமே தீரத்துடன் எதிர்த்து வாதப்போர் புரிந்து சுத்தவைதிக சிவாத்துவித விஜயத்துவஜத்தை ஆரியமததேசத்தில் நாட்டினராய், நிவிர்த்திப்பிரவிர்த்திகளில் உத்தம தருமங்களாய பரமஹம்ஸாச்ரமமகாயாகதீக்ஷைகளை முறையே அனுஷ்டானத்திலமைத்த புண்யவான்களாகவே, அவரை இவர் துதித்தாலும் துதிக்காவிடினும் அவர் பெருமைக்கேனும் குறைவில்லை. இவர் முன்னூறவண்டிச் சுவடிக்கதைக்காரரைப்போல ஏகதேசப் பிரசித்த பண்டிதரல்லவாதலாலென்க. இவர்கள் ஆகமங்களைப் பலவாறு ஸ்ரீராமானுஜபாஷ்யக்காரரும் அவர் சார்பினரும் சததாக்கண்டிருக்க அதற்கெல்லாம் ஓர்வழி தேடாது ஏதோ தமது சித்தாந்தம் மிகவும் குறைவற்று ஆரியதேசத்தில் வழங்கப்படுவதென்று நினைத்து ஆரியர் அனைவரும் அநாதிகாலமாய் அனுஷ்டித்ததும் இவர் முன்னோரும் அனுஷ்டித்துவந்ததுமான திவ்யவேதாந்த மார்க்கத்தைத் தூஷிக்க முன்வந்து ஆரியத்துரோகியும் பிதிருத்துரோகியுமான இவருக்கு மனம் வந்தது எவ்வூழ்வினைப்பயனோ? மேற்காட்டியபடி நவீன சைவர்கொண்டாடும் திருட்டாந்தங்களுக்கும் சொற்களுக்கும் மூலப்பிரமாணங்காட்டவேண்டிய மீளாத் தலைச்சுமை தன் றலையிலேயே ஏறியதை இனியேனும் அறிவாராக. சங்கராசாரியருக்குப் பரிந்தென்கிறார். அவ்வாசாரியருக்குப் பரிந்தது இவ்வாரியனரல்ல. மற்று சிவபுராணம் கூர்மபுராணம் இலிங்கபுராணம் ஹரிவம்சம் முதலிய புராணேதிகாசங்கள் புகழ்ந்த சிவாம்ச யோகாசாரிய புண்ணியாவதார மகாபுருஷராகிய ஸ்ரீசிவரகசியக்காரர் ஸ்ரீமதாதிகூர்மமூர்த்தியாய ஸ்ரீமந் நாராயணன் இவர்களல்லவோபரிந்தார்கள். ஐயரே! உண்மையையாராய்க. உமது முன்னூறவண்டிச் சுவடிக்காரர்க்கும் சிவப்பிரகாச நூலுடையார்க்கும் மெய்கண்டார்க்கும் பண்டிதர் ஞானப்பிரகாச தம்பிரானுக்கும் மற்றைய நுமது நவீன சைவாசாரியருக்கு மன்றோ நீரே பரிந்தோடி வைதிகசம்பந்தம் சேர்க்கக் கடல்கடந்து கங்கையாடிப் பல்லாண்டுகளாய்க் கமேபாடுபடுகின்றீர். ஆகவேசித்தப்பிரமாண நூல்களைக்கொண்டு சாம்சித்திக ஞானர்களான ஸ்ரீகுருமூர்த்தி முதலியவர்களுக்கு எங்கும் புகழ்தானே விளங்கியது. நீவிர் விசேடமாய் மேற்றிசையாருபதேசத்தையும் வழக்கத்தையும் முக்கியப்பிரமாணமாகக்கொண்டவராயிற்றே. அத்தேசத்தவர் உமது கனவில் நவீனாசாரியரானவரைத் தத்துவசாஸ்திரிகளென்று புகழ்கின்றாரா? அல்லது லோககுருஸ்வாமிகளையா? அதை நன்கு விசாரித்திரா? அக்கதை யுமக்குநன்குதெரியுமே. நீர் கூர்மபுராண லிங்கபுராணங்களின் உண்மைப்பொருள் தெளிவுபதேசஞ்செய்த் பாமரசாரியர் நாவலர்களுக்கு மட்டில் அவர்யோக்யதா பத்திரம் செல்லுபடியாயதே. ஸ்ரீலோகாசாரியஸ்வாமிகளுக்காகாதோ? நிற்க.

வைதிகபாசுபதோபநிடதமென்று ஏதோ சிலவற்றைக் குறைப்பது உமது கடமையேயாதலின் அவைதிக பாசுபதம் ஈதெனக் குறிப்பதும் உமது தலைச்சுமையாயிற்றே. அவனமாயின் அது புராணாதிப் பிரமாணங்கள் கூறியவாறு காமிகாதிகளேயென்று ஏற்பட அந்தோ! இக்கஷ்டங்கள் உமக்குத்தானா வரவேண்டும்? பாருங்கள்! ஏதோ தந்திரமாய் ஒரு தமிழ்ப் பத்திரிகையில் ஓர் மூலையில் எழுதிமழுப்பிவிட்டால் நமது சித்தாந்தம் நாட்டியதாய்விடுமென்று கருதி மனம்போனபோக்கெல்லாஞ் சென்று எழுதிவிடுத்தீர், அது இப்படி முடிந்தது.

இனி நீவீர் சித்தாந்தச் சூரராயின், உமக்கு ஸ்ரீகண்டபாஷ்ய ஸ்வீகாரம் நிலைக்கவேண்டியதானால், உடனே வடமொழியில் ஒரு நன்னூலியற்றிடும் பார்ப்போம். உமது பூர்வாசாரியரில் ஒருவர் பிரஸாததீபிகை, பிரமாண தீபிகையாதிகளை வடமொழியிற் செய்து களித்தவாறு போகாது காசியில் கல்வி பயின்றமைக்கேற்க எழுதவேண்டும். உமதுள்ளத்தார் கதையில் அப்பண்டிதர்களும் கடைச்சிடரேயாம். ஆதலாற்றான் ஒருவரெல்லாம் ஏகலிங்கமாக்கினர். மற்றவர் 'குட,மென்ற அமரத்துச்சொல்லையு மறியாது'தென்மொழியிலக்கணம் விடுத்தார். இவையெல்லாம் நிற்க. ஸ்ரீ சிவரகஸ்ய வசனங்களிடையே சேர்க்கப்பட்டனவென்றீரே, அது எப்பிரமாணங்கொண்டு புகன்றீர். ஸ்ரீமத் லோககுரு ஸ்வாமிகள் அவதாரம் சிவரகஸ்யத்தில் மாத்திரமுளதோ? பாத்மத்திலும் அவர் சித்தாந்தத்தைத் தூஷிக்குமிடத்தும் கூட அவர் சிவாவதாரரெனப்பட்டுள்ளது. விஞ்ஞானபிக்ஷு ஸாங்கியப் பிரவசன பாஷ்யத்தில் அத்துவிதத்தைத் தூஷிக்கவெழுந்து பலவாறு பேசியும் ஸ்ரீலோககுருவைச் சிவாம்சாவதாரமென்றே எடுத்தார். அவர் கபிலரை விஷ்ணுவின் அவதாரமெனவும் கூறினர்- அது விஷயம் எவரும் ஒப்பாதவிஷயமாயினும் 'பிரதிவாதி கைச்சாத்திட்டளித்த ஜயப் பத்திரிகை, யென்றபடி, விரோதிகளே அவரைச் சிவாம்சாவதார' ரென்ற நீர் அவர் திருவவதாரமகிமையைக் கற்பிதமோ, பிரக்ஷிப்தமோ என்கிறீர். நிற்க- ஸ்ரீசிவமகாபுராணம் கூர்மபுராணம், இலிங்கபுராணம் முதலிய அனேக புராணேதிகாஸங்களில் சிவ விஷ்ணுக்களின் அவதாரங்களெனக்குறிக்கப்பட்ட ஸ்ரீஜைகிஷவ்ய ஸ்ரீவேதவ்யாஸர்களையும் ஓரோரிடங்களில் அத்துவித வேதாந்த சித்தாந்தத்தை அவர் விரித்துப் பற்பல திருஷ்டாந்தங்களுடன் நிலைநாட்டுவாராயின், அவர் அவதாரமகிமை சொன்ன பல புராணவசனங்களையும் இனி இவர் பிரக்ஷிப்தமென்றே சங்கிப்பார்போலும். மேலும் ஸ்ரீசிவகீதை முதலிய விடங்களில் மேற்கண்ட திருட்டாந்தங்களும் சொற்களும் விரிந்து கிடப்பதால் அதுவும் இவருக்குப் பிரட்சிப்தமாம்போலும். மேலும் ஸ்ரீலோககுரு ஸ்வாமிகள் அவதாரத்துடன் முன்னும் பின்னும் அநேக சிவபக்தாவதாரங்கள் சொல்லப்பட்டமையால் அவர்களில் இவர் ஒருவர் அவதாரமட்டில் பிரட்சிப்தமெனச் சங்கிக்கு

மிவர் மற்றவர் விஷயத்தில் சங்கிக்காத காரணம் யாது? இவர் கண்டபடி சிவரகசிய மகேதிகாசத்தில் மற்றச் சிவ பக்தர்கள் அவதாரம் ஒரு முறையும் இம்மகாசாரியாவதாரம் மும்முறையும் சொல்லப்பட்டதாகவே இது பிரட்சிப்தமாம்பொழுது மற்றதின் கதி யாதாகும்? அடுத்தாற்போல் ஸ்ரீஹரதத்தமுனிவர் திருவவதாரமும் ஸ்ரீமத் தீட்சிதசுவாமிகள் திருவவதாரமும் சொல்லப்பட்டதே. அவ்விருவரும் முறையே பிராமணர் கீழ்வருணத்தாரை ஸேவிக்கக்கூடாதென்றும்,—

‘நப்ராஹ்மணா நவாவண‐நிஷேவணேந’|

என்றும், காமிகாதிகள் அவைதிகங்களென்றும் அத்துவிதசாஸ்திரமே சற்சித்தாந்தமென்றும் முறையே நிரூபித்தமையால் அவர் அவதாரமும் பிரட்சிப்தமென்பாரோ ஏதோ? தமக்குச் சாதகமானால் அது அனுதிவசனமில்லாமற்போனால் பிரட்சிப்தமென்பது வெகு சுலபமானவாதமேயாயினும் அவ்விதவாதம் அறிஞரிடம் ஏலாதென்பதையுமிவர் அறிந்திருப்பார். அறிந்தும் விதண்டாவாதமெழுதுவது நியாயமல்ல. வேதங்கள் முற்றும் பிரமாணங்கள் அனுதிநித்திய சுயம்புக்களென்று இவர் சுவீகாரபாஷ்யக்காரர்சொல்வதையும் மறந்து அவைகளில் துர்விபாகஞ்செய்து சிலவற்றை அப்பிரமாணமெனவொழிந்த விவர்க்கு இதிகாசங்களில் சில வசனங்கள் அப்பிரமாணமென எப்பிரமாணமுமின்றிக் கூறுவது ஒரு பெரிதோ? வைணவர் மாத்துவராதி புறமதத்தவர்களுள் முற்காலத்தவர் புராணங்களில் சிவசாத்துவிகம் சிவதாமஸமென்று பிரித்து விபரீதப்படுத்தினர். அதன்பிறகு இக்காலத்தவதரித்த சில நவீனவைஷ்ணவர் ஸ்மிருதிகளிலும் அத்துர்விபாகத்தை ஏற்றித்தமினத்தாருள் வழங்கிவருவாராயினர். பிறகு இக்காலத்தில் நமது சமகால் கலிகால சித்தாந்த சிகாமணியாய திருவிசநல்லூர் ப்ரம்மஸ்ரீ- ராமசுப்பாசாஸ்திரிகள் புராணவசனங்கள் யாவையும் வேதபாஹ்ய அவைதிக சிவாகம சமானங்களாமென்றும், ஸ்மிருதிகளில் சாத்துவிகாதிப்பகுபாடே சாக்ஷாத் தருமம் பரம்பராதருமமென வுண்டென்றும் வேதங்களில் ஈசம், கடம், பிரச்னம், முண்டகம், தித்திரி, சாந்தோக்கியம், பிரகதாரண்யகம், கௌஷீதகி, சுவேதாசுவதரம் முதலியவைகள் பிரமாணமற்றவையைப் பிரமாணங்களெனச் சிறிதுகாலமும் மீண்டும் கேனத்தையும் மாண்டூக்கியத்தையும் சேர்த்துப் பன்னிரண்டு உபநிஷத்துக்களே பிரமாணங்களென்றும் சமயம் வந்தால் வாசுதேவவுபநிடதமும் பிரமாணமேயென்றும் தோன்றியவாறு சித்தாந்தம் எழுதிவிடுத்தார். இவ் வையரோ இவ்வளவு விபரீதசித்தாந்தங்கள் கலியுகத்தில் ததீசி கௌதமாதி சாபப்ரபாவமாக வைணவத்தில் மட்டும் பரவியது. மற்று சைவத்தும் பரவிய விந்தையை விரித்துக்காட்டுவோர்போல வேதாந்தங்கள் அவைதிகாகம தீக்ஷானுவாதம் செய்வனவாமென்றும் அவ்விதம் சொன்மாத்திரையில் கனவிற்கண்ட பொருளைக் கொண்டாவது எவ்விதத்தும் அவைதிக சம்பந்தம் ஏற்றமுடியாத மற்றவுபநிடதங்கள் முற்றும் அப்பிரமாணமெனவும் புதிய சொற்பன சைவசித்தாந்தஞ் செய்தார். ஆனால் வைணவர் பாஞ்சராத்திரிகள் செய்தது மிகத் தவறேயாயினும் ஒவ்வொருவரும் ஏதோ இது மாத்ஸியத்தின் உட்கருத்தென்றும் இது பாத்மவசனமென்றும் இது ஸூதசங்கிதையின் முகவுரைக் கருத்தென்றும் இது வியாஸர் கருதியதென்றும் சிலப்பிரமாணப் போலிகளையுங் காட்டினர். அவர் ஆதிகாலம் துவக்கி ஆரியர் வழக்கறிவாராகவே அங்ஙனஞ் செய்தார். ஆரியருக்குப் பிரமாணமில்லாது உபயோகிக்கும் வசனம் யாதும் லட்சியமில்லையென்பது அவருக்குத் தெரியும். இவ்விலங்கை வாசியார் சில ஆண்டுகளாய் ஆரியர்பழக்கம் ஆரியதேசத்தில் பெற்றாராகவே, அவர் இவ்வுண்மை யறியாது உபநிடதப் பகுபாடு கூறித் தம் வாக்கே அதற்குப்போதுமானப் பிரமாணமென்று நம்பினர். இவர் சுவசம்வேதனப் பிரத்தியக்ஷத்தால் தாம் மேற்கண்ட எல்லாப்புறமதாசாரியரிலும் சிறந்த பரமாசிரியாவதாரமெனக் கண்டார்போலும். இவர் உபசங்காரத்தில் இவ்விஷயத்தை நிரூபிக்கும் பாரம் ஆரியவேதாந்த அத்துவிதிகளுக்கே எனக் கூறியமையால் அனாரிய வேதாந்தத் துவிதிகளானவருக்கு இதன்வழி செல்வதனாவசியகமென்றாயிற்று. ஆகவே யாமும் ஆரியவேதாந்தத் துவிதியாகவே இவ்விஷயத்தில் வேண்டியபடி பிரமாணங்காட்டினோம். ஸ்ரீசிவகீதை கூறியபடி கேவலாத்துவிதிகள் மாயையை அநிர்வசனீயமென்பார். சாங்கியர் உள்ளதென்றும், புத்தர் சூன்யமென்றும் கொண்டார். இவருள் இவர் சாங்கியானுசாரியென்பதற்குப் பல காரணம் பாஷ்யவிசாரத்திலே காட்டப்பட்டது. ஆகையாற்றான் கபிலர் சூத்திரத்தில்,—

[௧] நாஸத:க்யாதி நஸ்ருங்கவத்॥
[௨] நஸதோபாதாத்॥
[௩] நாநிர்வசநீயஸ்யதத பாவாத்॥
[௪] நாந்யதாக்யாதி ஸ்வவசோவ்யாகாதாத்॥
[௫] ஸத்ஸத்க்யாதிர்பாதாபாதாத்॥
[௬] நாவைதமாத்மநோலிங்காத்தத்பேதப்ரதீதே:

(1) ‘இல்லதையறியா ராட்கொடுபோல,
(2) இருபொருளிதவும் பரஸ்பராபாதிதம்,
(3) அநிர்வசனீயமென்ப் தொன்றசம்பவம்,
(4) வேறாய்த்தோன்றல்தன் வசனவிரோதம்,
(5) சத்துமசத்தும் பரஸ்பரவிரோதம்,
(6) அத்துவிதமிலையான்மலிங்கத்தால்பேதந்தோன்றலால்’ என்பார்மேலோர்,

என்ற இவ்வாறு சூத்திரங்களை நான்காம் அத்தியாயத்தில் விரித்துரைத்தனர். ஆகையாலிவர் இவரின

த்தவரேயாவர். ஸ்ரீவியாஸமுனிவரோ, அடிமுதல் கடைவரையில் கபிலர் மதத்தை இடையிடையே மறுத்தார். ஆகவே வேதாந்திகள் காபிலர் இவ்விருவரும் வெவ்வேறு சித்தாந்திகளாமென்பது வெளிப்படையாயிற்று. அப்படியிருக்க இருவரையுமொன்று சேர்த்த விவர் சாமர்த்தியம் சாலப்புகழத்தக்கதேயாம். இவ்வளவோடு விடாது தமது தாழ்ந்த ஏகான்மவாத நிலைமைக்கென்று ஏகான்மவாதத்தை எப்பிரமாணமுமின்றித் தூஷித்து முடிக்கிறார். பாருங்கள்! அதன் தாழ்வும் உயர்வும் இவர் சொன்மாத்திரையில் அமைந்திடுமென்று இவர் கருதினரேயன்றி சுத்த வைதிக சிவாத்துவித சித்தாந்தச் சார்புடைய சிவபுராணாதிகள் எந்தச்சித்தாந்தத்தை அவைதிகமெனவும், அஸேவ்யமெனவும், பாஷண்டமெனவும், வேதபாஹ்யமெனவும் நிரூபித்தன வென்பதையும் அவ்வகைச் சாஸ்திரபுராணஸ்மிருத்யாதிவிக்கியாதவேத பாஹியத்தன்மையைத் தள்ளிக்கொண்டு மெள்ளமெள்ள வைதிகசம்பந்தம்பெறவேண்டியஅவா எவர்க்குமேற்கொண்டதென்பதை வைதிகதூஷணை செய்யும் சமயம் நோக்கி நமது ஐயரவர்கள் மேலான கனத்துக்கு நினைப்பூட்டுவோம். ஓர் அரசன் தகப்பனை நிந்திக்க, அச்சமயம் சமீபத்திருந்த ஓர் பிராமணக்கிழவர் ஐயா, அரசனே! நீர் அரசனானது எவராலே? (எவர் புத்திரராயினமையாலோ) அவரை நிந்தித்தால், உம்மால் தனம்பெற்றுக் கொழுத்த பரிவாரங்களுமக்கேது செய்யுமென்பதைச் சிறிது சிந்திக்கவேண்டுமென்று நினைப்பூட்ட, அவர் உடனே அடங்கிட்டாராம். அக்கதையை ஐயர் எமக்கு நினைப்பூட்டுகின்றார்- அந்தணர்களுக்கெல்லாம் ஓர் கோத்திரமுண்டே. கலியுகத்தின் 5000த்துக்கருகில் நடந்த ஜனகணிதத்தில் பிராமண க்ஷத்திரிய வைசியர்களானவரும் ஒவ்வொரு கோத்திரம் வைத்துக்கொண்டிருக்கிறாரே. அவர்களெல்லாருக்கும் கோத்திர கூடஸ்தரான மகரிஷிகள் பிருகுமுதல் அகஸ்தியரீறாகவுள்ள எண்மரேயாதலின், அவர்கொண்ட பூர்வசித்தாந்தம் ஈதென்பதை மிகச்சாந்தத்தோடு இவ்வையர் புராணங்களில் பார்த்திட்டால் இவர் கண்டபடி பிறரைத் திட்டுவது பெரிய பிதிருத்துரோகமென்பதை இவர் அறிந்திடுவாராக. இங்ஙனமிருக்க, 24-நெ விஜயத்துவஜப்பத்திரிகையின் கடைப்பக்கத்தைப் பாழாக்கிவிட்டார். பாருங்கள்! அன்று பாசுபதராம். அசுவத்தாமா, பாரத விஜயத்துவஜந்தாங்கிய சேனையின் கடைப்புறத்துக்குக் காவலாய் நின்று ஒருசமயம்வரை மீறி உண்மையறியாது ஸ்ரீமத் கண்ணபிரான் ஸ்ரீமதர்ஜுனன் இவரிடம் நாராயணாஸ்திரம் பிரயோகித்து அதுபாழாகத் தென்றிசை நோக்கிச் சாஸ்திரங்கள் பொய் சித்தாந்தங்கள் தவங்கள் எல்லாம் அங்ஙனமேயெனத் திட்டிக்கொண்டு, எவரையும் இலக்காக்காது செல்ல, இடையேயிவர் முன்னோர் செய்த புண்ணியவசத்தால் ஸ்ரீவியாஸோபதேசம்பெற்றுக் கிருதார்த்தரானவாறு இவரும் இன்றுதென்முகம்நோக்கிய மிச்சாவாதம் சதசத்வாதமாதி பலவற்றைப் புகன்று பல சாஸ்திரங்களையும் வேதாந்தங்களையும் பழித்திடும் இச்சமயம், இல்லையினின்று எதிர்ப்பட்டு யாம்செய்யுமிப்பெரிய சதுபதேசத்தால் நன்மதிபெறுவாராக. இதை இவ்விடத்து இவ்வளவுடன் விட்டு மேலே 5-ம் புத்தகத்தில் க-ம் இலக்கப்பத்திரிகையில் முன்வரும் வரிசையைப் பாப்பாம்.

இவ்வையர் விஜயத்துவஜம் 5-ம் புத்தகம் க-மிலக்கப்பத்திரிகையில் போடும் பீடிகையீது:—பிரவேசபரீக்ஷைமுதலியவற்றிற் சித்திபெற்றோர் தத்தம் தாரதம்மியத்துக்கேற்ப அரசினர் உத்தியோகசாலையில் பிரவேசஞ்செய்ய உரியராகின்றார். அவ்விதஞ் சித்திபெறாதோர் எவ்வளவு படித்தவராயினும் அவ்வரசினர் உத்தியோகப் பிரவேசத்துக்குரியவராகாரே. அவ்வாறே சிவபெருமான் அருளியவாறு வைதிக பாசுபததீக்ஷாநெறியானே உபநிடத புராணாதிகளைப்படியாதவர் அவற்றின் மெய்ப்பொருளை அறிந்து மெய்ந்நெறி அடைதற்குரியவராகாரென்பது திண்ணமாம். இதைச்சற்றுப் பரிசீலிப்பாம். இவருக்கு எப்பொழுதும் சுவேத பரமோபதேசமே பரமப்பிரமாணமாதலால் தற்காலத்தரசர் ஏற்படுத்திய கல்விச்சட்ட மீமாஞ்சையில் ஓர் அதிகரணத்தை இங்கெடுத்து நிரூபித்து வைதிகர் வாயையடக்க வெளிவந்தார். இவர் சுத்த வைதிக பாசுபத சித்தாந்தத்துக்குப் பிரமாணமாக வெடுத்துக்காட்டிய அவைதிக ராஜாங்கச் சட்டமீமாஞ்சாதிகரணமும் இவர்கொண்டபடி பொருள் தராது விபரீதமாவதைக் காட்டுவோம். இவர் காட்டிய வதிகரணத்தில் பரீக்ஷையிற் றேறியவருக்கே உத்தியோகமென்றது விஷயவாக்கியமாம்போலும். அதில் ஒரு சம்சயம்,—உத்தியோகம் பார்க்கவேண்டிய திறமைமட்டுமிருந்தால் உத்தியோகம் பார்க்க அதிகாரம் போதாதா? அவ்வரசினர் கொடுத்த யோக்கியதாபத்திரிகையும் வேண்டுமோ? அதுவேதான் வேண்டுமோவென்பதுதானாகும். அதற்குப் பூர்வபக்ஷம்:—உத்யோகம் பார்க்கத்தக்க திறமையே வேண்டும். அதுதான் காரியத்துக்குபயோகம். ஒருவன் அற்பவித்தையைக் கற்றும் உலகந்தெரியாதவனாய்த் தன் புஸ்தகத்தை மட்டிலும் உருப்போட்டமையால் கேள்விப்பத்திரிகைகளுக்குச் சமாதானமெழுதிவிடலாம். அவனுக்கரசினர் யோக்கியதா பத்திரிகையும் கிடைக்கும். அவன் எதற்கு முதவானாகையால் கல்வியும் திறமையுமே உத்யோகாதிகாரமாமென்பதுதான் அமையும். ஆகவே அச் சித்தாந்தம் உண்மையேயானாலும் அவரவர் படிப்புக்கும் திறமைக்கும் வேறு அளவின்மையானும் ஒவ்வொரு மனிதன் திறமையையும் பரீக்ஷித்து உத்தியோகங்கொடுப்பது அரசினர்க் கசாத்தியமாதலானும் யோக்கியதா பத்திரிகையே காரணமாகுமென்பது தானே- அங்கும் அதிகாரமாத்திரம். அது மூலமாயினும் திறமைவேண்டப்படுமென்பதும்கூட ஒண்டும். ஷை ஹ-ணமீமாஞ்சாசாஸ்திராதிகரணப்படி பிரகிருதத்தில் அவைதிக சிவாகமோக்த தீக்ஷைபெற்றோர்க்கே உபநிடத புராண இதிஹாஸங்களின் பொருள் விளங்குமென்ற சித்தாந்தமாம். இங்கு உபநிடதபுராணங்

களைக் கற்றவன் நன்னெறி பெறுவானென்றது விஷயவாக்கியம். இங்கு அவ்வுபநிடத புராணாதிகளைக் கற்கவேண்டி ஏதேனும் சம்ஸ்காரம் வேண்டுமேயன்றிபதபதார்த்தஞானத்திற்கு வேண்டிய இலக்கணவிலக்கியவறிவே போதுமோவென்பது பூர்வபக்ஷம். அவையெல்லாம் சொன்மயமாகையால் இலக்கணவிலக்கியப் பயிற்சியே வேண்டுமென்றி சம்ஸ்காரம் வேண்டுவதில்லையென்பது சித்தாந்தம். அதே உபநிடதாதிகள்தம்மை ஓதுவார். இந்த விரதம் செய்து (சித்தசுத்திபெற்றே) ஓதிடவேண்டுமென விதித்தலால் அவசியம் சம்ஸ்காரம் வேண்டுமென்பது. இங்கு இவற்றிற்கும் இவர் எடுத்த ஆங்கிலேயச் சட்ட மீமாஞ்சையதிகரணத்திற்கும் சம்பந்தஞ் சிறிதுமில்லை. அதே மீமாஞ்சையைத்தானே இவர் பிரமாணமாய்க்கொண்டபடியால் அதைக்கொண்டே அவர் சித்தாந்தம் தவறெனக் காட்டுவோம். ஐயரே! நீர் படித்த மேற்படி மீமாஞ்சையில் ஆங்கிலேய அரசினர் கொடுத்த யோக்கியதா பத்திரம் பிரான்சு ராஜாங்கத்துக்கு உதவுமா? அவரதை மதிப்பாரா? அவர் இவ்வாங்கிலேயரிடம் யோக்கியதாபத்திரிகை பெற்றவருக்கு உத்தியோகங்கொடுக்கமாட்டாரே. இவ்வரசாங்கத்துட்பட்ட சிற்றரசராயின் அதற்குக் கட்டுப்படுவார்- மேலானவராயினும் சமரானாயினும் கட்டுப்படாரன்றே. அங்ஙனம் வேதபுராணேதிஹாஸங்களான வைதிகர்க்குரிய நூல்களுக்கு வைதிகமான தீக்ஷைகளும் உபநயனாதி சம்ஸ்காரங்களும் வேண்டுமா? வைதிக நூல்களாகிய ஸ்மிருதி புராணேதிஹாஸங்களில் நிந்திந்து வேதபாஹ்யமென்று ஓதக்கப்பட்டவவைதிக சிவாகமோக்த தீக்ஷையா வேண்டப்படுவது? நமது மீமாஞ்சையின்படி எந்த வரசாங்கத்தில் உத்தியோகத்தை அபேக்ஷிக்கின்றானோ அதனிடம் அவன் யோக்கியதா பத்திரிகையைப் பெறுவது உசிதம். அவைதிகத்தில் அதிகாரம் வேண்டப்படுமோனால் அவைதிக தீக்ஷையுபயோகமாம். அங்ஙனமின்றி வைதிகத்தில் அதிகாரம் உபநயனாதிகளாலேயே சித்தித்திருக்க அவருக்கு விரோதிகளான அவைதிகர்கொடுக்கும் அதிகாரப் பத்திரம் செல்லுமா? வேதோபநிடதபுராணங்களைக் கற்க வதிகாரம்பெற வேறு சம்ஸ்காரம் யாதும் அகப்படவில்லையாதலின் இதையே அந்தவிட மமைத்தோம் என்பீரேல், உமது அறியாமைக்கு யாம் வருந்தி விடைபளிப்போம். ஓ வித்வன்மணீ! வைதிகர்க்கு அவைதிக சம்ஸ்காரம் விதிக்க உமக்கு உமது அவைதிக சாஸ்திரமாவது இடங்கொடுத்ததோ? ஒவ்வொரு உபநிடதத்திலும் ஒவ்வொரு சாகைக்குரிய ஒவ்வொரு கற்பத்திலும் வேதவிரதங்களும் உபநிஷத்து விரதங்களும் விரிந்து சொல்லப்பட்டதைச் சிறிதுமறியாது ஸ்ரீவேதவ்யாஸர் உபநயன முதலியவற்றைக் கற்க அதிகாரமெனக் குறிக்க, அதையுமோராது ஏதோ வைதிகர் வேதங்களையும் வேதாந்தங்களையும் உபபிருங்கணங்களையும் படிக்கவேண்டி வைதிக தீக்ஷைசெய்துகொள்ளவேண்டுமென்று கூசாதுரைத்தது மிக்கவிந்தை. நீர் அறிந்து அடங்கவேண்டி வேதவிருதங்களை விதிக்கும் ரிஷிவசனங்களையும்உமதுசுவீகாரபாஷ்யக்காராதியோர் வசனங்களையுஞ் சிறிது எடுத்துக்காட்டுவோம். ஒவ்வொரு சாகைகளையும அத்தியயனஞ் செய்யுமாற்றல் அடையவேண்டியதற்காக வெவ்வேறு விரதங்கள் விதிக்கப்பட்டன. ஸ்ரீ போதாயன முனிவர்: ஸ்பஷ்டமாய் வைசுவதேவம், ஆக்னேயம், சுக்ரியம் முதலிய விரதங்களை இவ்விதமனுஷ்டிக்கவேண்டுமென்றும் அந்த விரதங்களுடன் வேதத்தின் சங்கிதைகளில் இந்த பாகத்தை அத்தியயனஞ் செய்யவேண்டுமென்றும் நிருபித்தாரன்றி, ஆசுவலாயனர் "மஹாநாம்னீ" முதலிய விரதங்களையும் உபநிடத விரதத்தையும் விதித்து ஐதரேய ப்ராம்மணஞ்சொன்னபடி இவைகளைச் செய்தே ரிக்வேதத்தை அத்தியயனஞ் செய்யவேண்டுமென்று நிருபித்தார். சுக்லயஜுஸுக்குச் சூத்திரக்காரரும்அநேக ஸௌரவிரதங்களை வேதாத்தியயனாங்கமாக விதித்தார். சாமவேதிகளுக்கு திராஹ்யாயன கோபிலாதிகள் வைசுவதேவமாதிபல விரதங்களைக்காட்டினார். அதர்வணவேதிகளுக்குக் கௌசிகர் சிரோவிரதத்தையும் ஸப்தஸௌர்ய ஸவங்களையும் விதித்துக் கோபதப்ராம்மணம் சொன்னபடி வேதாதிகாரத்தை விரித்தார். எல்லா வேதங்களிலும் உபநயனத்தன்று யஞ்ஞோபவீதம் போடுங்காலத்து மந்திரமொன்று உண்டு. அது வருமாறு காண்க.

"ஸர்வேஷாம் வேதாநாமதிகாராய"

'எல்லா வேதங்கட்கும் அதிகாரம்பெறுதற்கு' என்று இதனால் வேதவேதாந்தங்களின் உண்மையறிந்து கிருதார்த்தனாய் நிற்பதற்கு உபநயனமே அதிகாரமா மென்பதாயிற்று. ஆதலாற்றான் வியாஸர்—

ஜந்மநீ த்விஜாதீநாம் மாதுஸ்ஸ்யாதேகஜந்மந:|
த்விதீயம் ச்சந்தஸாம் மாதுர்க்ரஹணாத்விதிவத்குரோ:॥

ஏவம் த்விஜாதிமாபந்நோ விமுக்தோ வாந்யதோஷத:|
ஶ்ருதிஸ்ம்ருதிபுராணாநாம் பவேதத்யயநக்ஷம:॥

(1) 'அந்தணராதி மூவருணத்தவர்க்கு இருபிறப்புக்களுண்டு. ஒன்று தாயின் வயிற்றில், மற்றது விதிப்படி குருவிடம் ஏற்கப்படும். காயித்திரி கர்ப்பத்தில்,—

(2) இங்ஙனம் (உபநயனத்தால்) துவிஜனானவன் வேறு குற்றமேதுமில்லாதவனாய் சுருதிஸ்மிருதி புராணங்களை அத்தியயனம் செய்ய அதிகாரியாவா'னென்றும்,—

ப்ராஹ்மணக்ஷத்ரியவிஶஸ்த்ரயோ வர்ணா த்விஜாதய:|
ஶ்ருதிஸ்ம்ருதிபுராணோக்ததர்மயோக்யாஸ்து நேதரே॥

பிராமண க்ஷத்திரிய வைசியரென மூவருணத்தவரும் துவிஜராவர். அவரே சுருதிஸ்மிருதி புராணோக்த தருமாதிகாரிகள்; மற்றவர்க் கதில்லையென்றும் வேதாத்தியயனஞ்

செய்யவதிகாரம் உபநயனத்தாலென்றும் சொல்லியருளி ஞர். மேலும் உசனமுனிவர் ஸ்மிருதிகள் அதர்வணவேதி களை உத்தேசித்து—

சுஹ்யெஸ ஸ்த த தம்வெஷாநு ஹஸஹ்நா ஈவபாராயண:||

'வேதங்களை ஓயாது யடிக்கவேண்டும். 'பஸ்மஸ்நானத் துடனென்று'சிரோவிரதத்தைக்குறித்தார்.மேற்கண்டவசனம் மற்றஸ்மிருதிகளில் மற்றவேதாத்தியயனவிதியிலும் சேர்ந் துளது. இவ்விஷயத்தயே உமது ஸ்வீகாரபாஷியக்காரரும் ப்ரம்மமீமாஞ்சையில் முதலத்தியாயம் ௩-ம்பாதத்தில் அப சூத்ராதிகரணத்தில்—

ஸம்ஸ்காரவராமெஶ-ரா தத஭ாவாவிஷாவாவு|
ஶ்ரவணாயூயநாஷ-ஷெ திஷெயாசுஸ்ரெ தஶு||

என்ற சூத்திரங்களில் நன்கு நிரூபித்தார். மேலும் இரண்டாமத்தியாயம் இரண்டாம் பாதத்துள்ள பாசுபத்யா திகரணத்திலும் 'வேதங்கள் முதல் மூவருணங்களுக்கேயுரி யனவென்றும், சிவாகமங்கள் நான்குவருணங்களுக்குமுரிய ன'வென்றும்ஏகதேசிமதானுவாதமுகத்தால் நிரூபித்தனரே. அந்தியசைவர் வரை சைவசமயத்தில்சமாதிகாரத்தைத்தரும் உமது அவைதிக சைவ தீக்ஷைதானு வைதிகரகசியார்த்த மறியக் கூடிய அதிகாரம் தருவதுபாரும்! ஓ ஐயரே, தீக்ஷை, மந்திரதந்திரங்களை உமது சித்தாந்தசாராவளிக்காரர் சொன் னபடி ஜாதி ஸம்ஸ்காரங்களல்ல; மற்று சைவாத்தும ஸம்ஸ்காரமே. அங்ஙனமாகசரீரஜாதிகளையும் கலந்து செய்ய ப்படவேண்டிய வேதாதிகார சம்ஸ்காரமாகிய உபநயனம்வே தவிருதங்களாதிகள் அந்தோ, அவைதிக தீக்ஷையாலாகும் எனல் மிகவும் புகழத்தக்கதே- பரமசாந்திப் பிரதானமரன தபோநிஷ்டாதிகாரம், சிறியபெண்ணை விவாகஞ்செய்துகொ ண்டு சுகிப்பவர்க்கே கிடைக்குமென்பதுபோல இவ்வசனம் எவ்வாற்றானும் பொருந்தாது- ஆகையாற்றான் வேதமும்

'தஸ்ாஷ்ஶ்ரஜாவவீதெ-தூவாயீயீ-தாயூாவயெக'|

'யக்ஞோபவீதியே அத்யயனம் செய்யவதிகாரி- ஆசா ரியத்துவமும் அவனுக்கே' என்றும் விதித்தது- பிராஜாப த்திய சௌம்யாக்னேய வைசுவதேவமாகிய இவைகளுக்கு ஒவ்வொரு காண்டவுபாகரணமும் அதன் துவக்கம் செய் யவேண்டுங்காலத்து அனேக ஓமாதிகளும் ஏற்பட்டாற்போல உமது அவைதிக தீக்ஷையில் வைதிக சம்பந்தம் ஏதேனும் உண்டோ? மேலும் வேதங்களுக்கு உபாகரணமென்ற ஆரம்பம். உத்ஸர் ஜனமென்ற ஓய்வு - இவைகள் யாரு க்கு விதிக்கப்பட்டன? வைதிக சம்ஸ்காரமாகிய உபநயனம் பெற்றவர்க்கா? அல்லது உமது அவைதிக தீக்ஷையுள்ளா ர்க்கா? நியத்தியமும் பிரமயஞ்ஞமென்று வேதம் ஓதிவருதல் வைதிகர்க்குரிய நெறியா? அவைதிகர்க்குள்ளதா? நித்தி யதர்ப்பணத்தில் வேதங்களுக்கும் வேதாங்கங்களுக்கும்வே தாந்தங்களெனப்படும் உபநிடதங்களுக்கும் பாடமும், அவ ற்றின் மூலரிஷிகளுக்கும் அவ்வவ்வேத புருடர்களுக்கும் தர் ப்பணமும் வைதிகர் செய்கின்றனரா? ஆகமிகரா? வேதவி ரதலோபப்பிராயச்சித்தமும் உபநயனகாலப் பிராயச்சித்தமும் வைதிககுலத்தாருக்கா? உம்மினத்தாருக்கா? 'உன்னிடம் ரிக்கைச்சேர்ப்பேன்- யஜுஸைச் சேர்ப்பேன்' என்றுவியா ஹ்ருதிஹோமம் உமக்கா?எமக்கா? பிறந்தபொழுதே ஜாத கன்மத்தில்,—

'வெஷொவெவ-ஶ நாஸெஸி'

'வேதங்களே புத்திரனெனப்பட்டாய்' என்று புத்திர னைவேதரூபமாகப் பாவித்துச் சம்ஸ்கரிப்பது வைதிகரையா? அவ்வேதபாஹ்ய தந்திராவலம்பிகளையா? இறந்தகாலத்தில் ப்ரம்மமேதத்தால் வேதங்களில் லயிக்குமாறு ஸம்ஸ்கரிப்ப தெம்மினத்தாரையா? உம்மினத்தவரையா? வேதங்களெல் லாம் புகழ்ந்த அக்னிஹோத்ராக்னியும் அதனுற் சம்ஸ்காரம் எமக்குரியுதா? உம்மினத்தாருக்குள்ளதா?

ஶூஶ-வெ-வாரா-ணிஸிதிஷஹவிஷொ஧க்ஷி ணெகணெ-ஜவதி||

'ப்ரம்மவித்தின் வலது காதில் (மரணசமீபத்தில் புத்தி ராதியோர்) பிருகு வல்லியை தைத்தரீய உபநிடதத்தில் பஞ்சகோசவிவேக வித்தையை ஜபிக்கவேண்'டுமென்ற விதி எமக்கோ? உமது இனத்தார்க்கோ? வேதாதிகாரார்த்தவுப நயனமில்வழி நிந்தை எம்மினத்தார்க்கோ? உம்மவருக்கோ? 'அந்தணர் கருங்கலமருமறையாரங்கம்' என்னுமினத்தாசிரி யரான நீர் கொண்டாடும் மகான் புகழ்ந்ததும் உம்மவரை யேயோ- சைவர் வைணவர் இருவரும் வைதிகமான சம் ஸ்காரத்தால் விப்ரத்துவமும் சைவவைணவசம்ஸ்காரங்களால் சைவத்துவமும் வைஷ்ணவத்துவமும் சித்திக்குமென்று இன்றுவரை அவரவர் சித்தாந்தங்களில் எழுதிவந்ததையும் மறந்து சில சாஸ்திரோக்த சம்ஸ்காரமே வேதாந்தப்பொ ருள் விளக்கும் அதிகாரமாமென மெள்ள எழுதித்தப்பித்து க்கொள்ளப்பார்த்த உமது நினைவை என் சொல்வோம். "வை திகர் அதிசூட்சுமதரிசிகள், அவர் நம் வஞ்சகம் காண்பார் கண்டிப்பா'ரென்று நீவிர் அறிந்தீரில்லை-நினைத்தீரில்லை. ஐயோ பாவம்! வெளுத்ததெல்லாம் பாலென்றும், கண்டதெல்லாம் கற்கண்டென்றும் கள்ளிப்பாலையும் பாஷாணக் கட்டியையும் ஏற்றுச் சுகித்தவர்போல நீரும் சிவனென்றுவது உமதவை திக சிவாகமத்துள்ள சொற்போன்ற சொல்லேதாவதுகண் டால் ஓடிப்பிடித்து உரிமைகொண்டாடி ஏதோ பொரு ளும் எழுதிவிட்டொழிப்பீர். மற்றவரை அம்மட்டோடு பழி ப்பீர்- உமது பெருமை [மறறவர் அச்சுதறிந்துழி] ஒழிப் பீர்- இது உமதியல். ஐயரே! வைதிகருக்கு அத்துவிதசுத் தியுள்பட தீக்ஷையுபநயனமேயன்றி வேதாதிகாரத்துக்குவே றில்லையென்பது கஞ்சனூர் நாயனர் அன்று போகாவளி யில் எறிமழுவேறி—

ஸ்யா நயேவதிழ'॥

என்ற செய்யுளால் உபதேசித்தருளிய நேர்மை உமது செவியெட்டாததும் சிவ சிவ! உமது வேதவைதிக வித்வத்வேஷக் கொடுமையாலேதான்போலும். அதுகொண்டே

'நித்யாக்நி ந்யஜோபவீதீ நித்யஸ்வாத்யாயீ'

என்றும், தீர்த்தமுடையானென்றும், யக்ஞோபவீதமுடையவனென்றும், வேதம் ஓதுவானென்றும் பிராமணர்க்கிலக்கணங் கூறினர். ஆசிரியர் ஆபஸ்தம்பரால் இவ்விதமெங்கும் அவைதிக தீக்ஷாவான்களுக் காகமபாடமாயினும் வேதமாயினும் விதிக்கப்படவில்லை. அவ்விதம் இவரால் விதிக்கப்பட்டிருந்தால் எங்கேனும் இருபத்தெட்டு ஆகமங்களின் முதல் வசனமாவதுஎந்தவாகமதீக்ஷிதருக்காவது தெரியக்கூடுமே? அதுவோ கிடையாது, "தந்திரசங்கரங்கூடாது" என்றும் அங்ஙனம் தந்திரிசங்கரம்செய்தால் அனேகப்பாவம்உண்டென்றும் சொல்லியவசனங்கள் ஆகமங்களுட்கிடக்க, அவற்றைப்பற்றி இவர் எந்த ஏற்பாடுசெய்தார். இவர்எந்தவாகமத்துள்ளபடிதீக்ஷைபெறுபவர். வைதிகர் ருக்குவேதியென்றும் யஜுர்வேதியென்றும்சாமவேதியாஎன்றும்சொல்லிக்கொண்டு அதற்கேற்றபடி கிரியைலோபிக்காது செய்துக்கொள்வதுபோல இவர் யாது செய்துக்கொள்ளுகிறார். இவ்விஷயங்களைப்பற்றி ப்ரம்மவித்தியா பத்திரிகையில் கடிதநேயர்களும் பத்திராதிபரும் கேட்டிருக்கும் அளவிறந்த கேள்விகளுக்கெல்லாம் மௌனஞ்சாதித்து வைதிக குலசம்பந்தம் பூர்வபுண்யத்தால் கிடைத்திருக்க அதையொழித்து அதற்கு எவ்வளவோ கீழ்ப்பட்டதென்று ஸ்ரீ கூர்மபுராணம் முதலிய பலபுராணஸ்மிருதிப் பிரமாணங்கொண்டு ஸ்ரீமத் அப்பய தீக்ஷிதராதிபெரியோர் இகழ்ந்தொதுக்கிய ஆகமதீக்ஷையைப் பெற்று அதன்கீழ்ப்பட்ட நிலைமைக்குஅந்தோ! அவர் பூர்வநிலைக்குரிய அரியவேதவேதாந்த நூல்களையும் இழுத்துபயோகிக்கநேர்ந்தது கலியின் கொடுமையேயாம். ஆஹிதாக்னியான தகப்பன் அக்கினிஹோத்திரத்துக்கும் சிவாபிஷேகத்துக்கும் பால்வேண்டுவது அவசியமாக, அதற்காக வைத்திருந்த பசுவை அவனிடமிருந்து வலியவாங்கிக்காலையில் தாமும் தமது நாயும் சமமாய் மேஜையிலிருந்து அருந்தும் காபிக்குபயோகித்த நேர்மைபோல இதுவும் நேர்ந்தது. இஃதும் ஓர்புறத்தேயாகுக. மேல் இவர் உபன்யாஸவைபவத்தை விளக்குவாம். "மேலே அவர் கூறும் முடிவுரையாவது" ஆகவே தைத்தரீயம் முண்டகம், கைவல்யம், சுவேதாசுவதரம், காலாக்கினிருத்திரம், அதர்வசிரஸு முதலிய உபநிடதங்கள் பூதி, சிரோவிருதம், அத்யாச்சிரமம், சாம்பவம். பாசுபதம், முதலியன,பெயர்களால் அவ்வுபநிடதங்களும், அவற்றைச்சார்ந்த ஈசகௌகட மாண்டூக்ய சாந்தோக்ய பிருகதாரணியபிருஹஜ்ஜாபால அதர்வசிகை முதலிய வுபநிடதங்களும் வைதிகபாசுபத அத்யாச்சிரமோபநிடதங்களாமெனவும் சாங்கியநிற்குண ஏகான்ம வாதமாயாவாத வுபநிடதங்களன்றோ மெனவும், தேர்ந்துணர்கவென்பது- இது மிகவும் வியக்கத்தக்கது. இவரெடுத்த உபநிடதங்கள் குறித்தவையெல்லாமவைதிகங்களான காமிகாதி தீக்ஷாமார்க்கங்களை யல்லவாமெனவும் அவை வைதிக பாசுபதத்தையே குறித்தனவாமெனவும் அனேக சுதப்பிரமாணங்களால் முறையே விசாரித்து சித்தாந்தப்படுத்தினுமாகையானும் இவைகளெல்லாம் சுத்தவைதிகநெறியை ஸ்தாபிப்பனவாக, விவற்றில் அவைதிக வாடையிருத்தல் நியாயத்திற்குக் கூடாதாகையாலும் அவைதிக மாயாவாத வேதபாஹ்ய காமிகாதி தந்திரதீக்ஷாகிருத்த விவேகர்களால் இவை தம்மினம்புகழும் தருமமொழிகளெனமயங்கப்பட்டனவேயன்றி உண்மையில் அவரினம் துலைத்திடும் சித்தாந்த சன்மார்க்க வேதாந்த நூல்களாம். உதாரணமாக இவர் தம்மினம் தழுவும் நன்மொழிகளென்றுகொண்ட மேற்படி உபநிடதங்களிலே இவர்கொண்டொழுகும் நவீன சைவமாயாவாத மெய்கண்டமார்க்கச் சூன்யவாதாத்மசம்சய சதசத்வாத விரோதத்தைக் காட்டி மேலே நமது சித்தாந்தத்தை நாட்டுவோம்.

தைத்தரீய உபநிடதத்தில் இவர் பூதியென்ற சொல்லுக்கு அவைதிகாகம தீக்ஷைபொருளென்றார். அது தவறென்று முன்னரே காட்டினோம்- மீண்டும் சில பிரமாணங்களைக் காட்டி முற்கூறிய பொருளை வற்புறுத்தி, இது இவருக்கு விரோதமேயென்பதையும் காட்டுவோம். இவரால் தம்மினமெனப் புகழப்பட்ட பிருகஜ்ஜாபாலத்தில்—

ஈதவைஷாஹவிஷா பூதிகரீ த்யுக்தா ஸ்வ
வர்ஹா அவஸ் ரூஸந்த்ராதக்ஷிணக் ருத்ரா:
வஸ்ாக விஶ்வேதவா உத்தர:॥ ப்ரஹ்மவிஷ்ணு மஹே
ஶ்வராஹ்ய. மத்யம் ஸூர்யாசந்த்ரமஸௌ பார்ஶ்வயோ:॥

ஆகையால்இந்தபூதி பூதிகரீஐசுவரியகாரணமென்றுசொல்லப்பட்டது. இவருக்கு முன்புறம்வசுக்களும்வலதுபுறம்ருத்திரர்களும் பின்புறம் ஆதித்தர்களும் இடதுபுறம்விசுவேதேவர்களும் ,நடுவில் பிரமன் விஷ்ணு ருத்திரர்களும்இருபக்கங்களிலும் சூரிய சந்திரர்களுமாமென்று ஸ்பஷ்டமாய்த் தைத்தரீயத்துள்ள பூதியென்பது ஐசுவரிய காரணமென்று ஸ்ரீ லோககுருஸ்வாமிகள் உரை செய்தபடியே பொருள்கொள்ளத்தக்கதென்றும் அதற்குக் காரணம் ஸ்ரீமந் நாராயணன் ஐசுவரியமடைந்து அதனுற்றானென்றும் நிரூபித்த வசனமுண்டு. இவ்வசனம் வைதிகமாகவே மந்திரப்ராம்மணநியாயத்தால் இந்தப்பொருளே அதற்குச்சொல்லவேண்டும். அந்தப்பூதியும் இவர்கொண்ட படியதல்ல - மற்று அக்னிஹோத்திரம் விரஜாஹோமம் முதலிய உத்தம வைதிகாக்கினியாலுண்டானதே என அதே உபநிடதம் அடியில் விரிவாய் நிரூபித்தது. மேலும் வைதிக பஸ்மதாரணமே இங்குவிதிக்கப்பட்டதெனவும் அதைத்தவிர்த்து தாந்திரிகபஸ்மம் கொள்வாரையும் பஸ்ம துவேஷிகளையும் நிந்திக்கவெழுந்த அவ்வுப

நிடத வசனங்கள் எல்லாம் அதைவைதிகமென்ற அடை சேர்த்தேயனுவதிக்கின்றன- நிதர்சனம் .

'யேஷாம் நாஸ்தி ஸ்ரௌதஸம்ஸ்காரஸ்தேஷாம் ஸம்ஸ்காரா'

ஸம்ஸ்காராய நாஸ்தி ஸம்ஸ்காரயேஷாம் நாஸ்தீதி நிச்சய: ||

எவர்களுக்கு வைதிகமானபஸ்மத்தில் சிரத்தையில்லையோ? அவர்களுங்கு கர்ப்பாதானம்முதலிய வைதிக ஸம்ஸாரங்கள் இல்லை என்பது ஓ முனி நிச்சயமோ? 'என்றபிருகஜ்ஜாபாலமோ கூறுகின்றது. இதனுல் பஸ்மம் இருவகை என்பதும் அதில் வைதிகம் சிறந்ததென்பதும் அதன்விரோதமே வைதிக சம்ஸ்காரஹீனர் என்பதற்கடையாளம் என்று நிரூபிக்கப்பட்டது. இத்துணையோடில்லாது அதே உபநிடதம தைத்தரீயத்தில் முதற்குேன்றிய ஆணையாகிய 'பூதியைத்தவிறற்க' என்றதை 'பூதிஎன்பது ;ஐசுவரியகாரணமாதலால்' எனவிரித்து மேலும் அதேத்தாற்போல உள்ள-

(க) ஸ்வாத்யாயப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம்|

(உ) தேவபித்ருகார்யாப்யாம் ந ப்ரமதிதவ்யம்||

[1] வேமமோதலையும் ஓதுவித்தலையும் விடக்கூடாது.

[2] தேவபிதிருகாரியங்களைவிடக்கூடாது என்றும் விதித்தவிதிகளையும் விரிக்கவேண்டியே.

'தத்ஸம்யாஸங்கோஹாஹவாவீத்'

'அக்நிர்ஜ்யோதிரித்யாதிபிர் மந்த்ரைர் ஜுஹுயாத்||

மேலேசந்தியோபாஸனத்தை நாடோறும் செய்யவேண்டும்- அக்னிர்ஜோதிராதி மந்திரங்களால் அக்னிஹோமம் செய்யவேண்டுமென்றது. இதில் முற்கூறிய ஸர்வவேதமாதாவாகிய காயத்ரீஜபமுகத்தானே சர்வவேதபாராயணபலம் பெறுதற்கும் இரண்டாவது தேவ பிதருக்களின் திருப்திக்காக நாடோறும் அக்னிஹோத்திரஞ் செய்யவேண்டுமென்று காட்டவுமே. இங்கு அக்னிகாரியம் வேருென்றெனக்கொள்ளற்பாற்றன்று; சாக்ஷாத்தாக அக்னிஹோத்திர மந்திரத்தையே எடுத்துக் காட்டினமையின் என்க; ஆகவே வைதிக கன்மானுஷ்டானத்துக்கும் வைதிக வித்யாத்யயனுஷ்டாத்துக்கும் வைதிக பஸ்மதரணம் வேண்டுமேயன்றி ஆகமதீக்ஷை சிறிதும் வேண்டப்படாதென்பது ஏற்பட்டது' மேல் பஸ்மஜாபாலத்திலும்—

வர்ஷவர்ஷே ஸம்வத்ஸரேஷ்வேவ ப்ரதோஷே ஜு: || ஸந்த்யாத்தகாலங்க்ஷிப்ரதிதவ்யம் தயோரபி நித்யம்ப்ராஹ்யம் தயோரேவாக்ஷ யாரணாக தயா ஆதிவந்நாஸ்||

'இதுவே ஆணையாம். இதுவே உபதேசமாம்- இதுவே பரமதருமமாம்- சத்யத்தை என்றும் தவறலாகாது. அங்ஙனமே உத்தூளனத்திற்குப் புண்டரங்களையும் ருத்திராக்ஷதாரணத்தையும் எனது திருவாராதனத்தையும் விடக்கூடாதென்று பெறப்பட்ட வசனத்தால் ஆதியில் தைத்தரீயவாக்கியம் தழுவப்பட்டு மேலே பூதியென்ற தைத்தரீயபதத்திற்கு ஐசுவரியகாரணமான பஸ்மருத்ராக்ஷ சிவார்ச்சனங்கள் பொருளாக விரிக்கப்பட்டன- ஆகவே எல்லாவற்றையும்பொதுவாய் ஐசுவரியகாரணம் எனலே பொருந்தும்- இது சுத்த வைதிக பஸ்மவிதியே. ஆதலாற்றுன்—

த்ரிபுண்ட்ரஸ்ய தாரணம் நமாயத்ரீஜபேசஸந்ஜுஹுயாத்||

'பஸ்மதாரணத்தை விட்டுக் காயத்ரீஜபம் செய்யக்கூடாது- அக்னிஹோத்திரம் கூடா'தென்று முன்னற் காட்டியவசனத்தால் பஸ்மம் தரித்தே சந்தியாவந்தனஞ் செய்யவேண்டுமென்றும் அக்னிஹோத்திரஞ் செய்யவேண்டுமென்றும், ஏற்படுதலால் அஃதின்றி அவை கூடாதென்றது- மேல்உபசங்காரத்திலும்—

ஶாம்பவா: பாஶுபதா மஹாஶைவா:|

சாம்பவர் பாசுபதர் மகாசைவரென்று ரிஷிகளே குறிக்கப்பட்டாரன்றி அவைதிகரானவரல்லர்-மேலும் இந்த பஸ்மஜாபாலத்தும் பிருகஜ்ஜாபாலத்தும் காலாக்னிருத்திரத்தும் ஸ்பஷ்டமாய் சந்நியாஸி அத்யாச்சிரமிஇந்தபஸ்மத்தில்முக்கிய அதிகாரியாக்கரட்டப்படுகிருன்- ஆதலாற்றுன் இந்தவுபநிடதமும் 'யதிபஸ்மதாரணம் விட்டா'லென்று பிராயச்சித்தமும் விதித்தது- இங்ஙனமாகாது இந்த பஸ்மதாரணம் அவைதிகசைவமாவதுகூடுமோ? பொருந்ாது- நாரதபரிவ்ராஜக உபநிடதத்தும் ஸந்நியாஸோபநிடதத்தும் மகாவாக்கியோபதேசானர்களெனவிடுத்த ஹாத்துவிஜரெனப்படும் சிவத்துவிஜரை உத்தமாதிகாரிகளாகக்கொண்டாசாரிய்ராக்கியவவைதிக சிவாகமோக்த பஸ்மத்திக்கு ஸன்யாஸிகள் என்றும் அதிகாரியாகாராகையால் என்க. நிற்க-

இன்னும் வரும்